# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | கத்தோலிக்கத் திருமறை - I,II | பாட எண் : 14 T I, II |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..................................................................

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

## பகுதி – I

01. பழைய ஏற்பாட்டு நூல்களில் ஞான நூலாக கருதப்படும் நூல்,
1) மலாக்கி 2) 1 குறிப்பேடு 3) சபை உரையாளர் 4) லேவியர்

02. தனிநபர் அல்லது இனத்தின் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் இறை கண்ணோட்டத்துடன் வெளிப்படுத்தும் வரலாற்று நூல்,
1) தோபித்து 2) ரூத் 3) எஸ்ரா 4) யோசுவா

03. "நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும், இவ்வார்த்தையே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி" இப்பகுதி காணப்படுவது.
1) 1 பேதுரு 1: 25 2) 2 பேதுரு 1: 25 3) 2 பேதுரு 2: 25 4) 1 பேதுரு 3: 25

04) உரோமப் பேரரசன் தொமிசியன் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட சோதனைகளுக்கு நம்பிக்கையூட்ட எழுதப்பட்டதாக கருதப்படும் நூல்,
1) மாற்கு 2) திருவெளிப்பாடு 3) லூக்கா 4) திருத்தூதர் பணி

05. ஞாயிறு தினத்தை தூயதாக கடைப்பிடிக்க வேண்டும் என்பது பற்றி எடுத்துக் கூறும் மரபு,
1) J மரபு 2) D மரபு 3) E மரபு 4) P மரபு

06) இயேசுவின் உயிர்ப்புக்கு முதல் சாட்சி,
1) பேதுரு 2) யோவான் 3) யாக்கோபு 4) மகதலா மரியா

07) "இதோ பார் என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். இக்கூற்றுடன் தொடர்புடைய இறைவாக்கினர்.
1) ஆமோஸ் 2) எசாயா 3) எரேமியா 4) எசேக்கியல்

08) தானிய அறுவடையின் முதற்பலனை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து யூதர்கள் கொண்டாடிய திருவிழா?
1) பாஸ்கா 2) கூடார விழா 3) பெந்தக்கோஸ்து 4) பாவப் பரிகார விழா

09) இயேசுவின் தலைமுறை அட்டவணையை எடுத்துக் கூறும் நற்செய்தி
1) மாற்கு 2) மத்தேயு 3) லூக்கா 4) யோவான்


kalvi.lk

10) தூய பவுல் ஆரம்பத்திலே கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியதற்கான காரணம்.
1) யூத தலைமைச் சங்கத்தின் உறுப்பினராக இருந்தமை.
2) யூத மதத்தின் மீது கொண்ட தீவிர பற்று
3) உரோமைக் குடியுரிமை பெற்றதினால்
4) திருச்சட்ட அறிஞர் கமாலியேலின் மாணவராக இருந்தமையால்.

11. பாவத்தில் வீழ்ந்த ஆதாமுக்கு கடவுள் கொடுத்த தண்டனைகளுள் பொருத்தமற்றது.
1) வேதனையில் நீ குழந்தைகளைப் பெறுவாய்.
2) வயல் வெளிப் பயிர்களை உண்பாய்.
3) உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது.
4) உன் வாழ்நாளெல்லாம் வருந்தி உழைப்பாய்.

12. திரு அவையின் பண்புகளுள் ஒன்றான “அப்போஸ்தலிக்கம்” என்பதன் வேறு பெயர்,
1) திருத்தூது 2) அறிவிப்பு 3) பொதுமை 4) புகழ்ச்சி

13. கி. பி .1602 இல் இலங்கைக்கு வருகை தந்த மறைதூதுக் குழு சார்ந்த துறவற சபை,
1) அகுஸ்தீனாரர் சபை 2) இயேசு சபை 3) பெனடிக்ற் சபை 4) பிரான்சிஸ்கன் சபை

14) தூய நற்கருணையின் சிறப்பியல்புகளுள் ஒன்று,
1) அப்பம் பிட்டுதல் 2) புதிய பாஸ்கா விழா 3) மெல்கிசேதேக் பலி 4) அனுபவித்தல்

15) “இதோ நான் ...... அனுப்புகிறேன். அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்” மலாக்கி 3: 1 இன் படி வெற்றிடத்திற்கு பொருத்தமான விடை,
1) என் மகனை 2) என் ஆண்டவரை 3) என் தூதனை 4) என் முன்னோடியை

16) திருவழிபாட்டு ஆண்டிலே மனமாற்றத்தின் காலங்களாக குறிப்பிடப்படுவது.
1) திருவருகைக்காலம், தபக்காலம் 2) தபக்காலம், நத்தார் காலம்
3) திருவருகைக் காலம், பொதுக்காலம் 4) பொதுக்காலம், பாஸ்கா காலம்

17. பழைய ஏற்பாட்டுப் பலிகள் அனைத்தையும் முடிவுறுத்தி எக்காலத்துக்குரியதும், தூய்மையானதுமான பலியாக காணப்படுவது.
1) முழுமையான எரிபலி 2) குற்ற நீக்கப் பலி 3) கல்வாரிப் பலி 4) நல்லுறவுப் பலி

18) இயேசு அலகையினால் சோதனையிடப்பட்டபோது மூன்றாவது சோதனை மூலம் எமக்கு கிடைக்கும் செய்தி யாது?
1) எமது ஆற்றல்களை சமுதாய நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.
2) புகழை விரும்பிச் செயற்படக் கூடாது.
3) இறைவனுக்குரிய இடத்தை உலக செல்வங்களுக்கு கொடுக்கக் கூடாது.
4) இறைவார்த்தையினால் ஊட்டம் பெறும் ஆன்மிக வாழ்வு மேலானது.

19. “மரியாயின் மாசற்ற இருதய சேனை” என்ற சபையை ஆரம்பித்தவர்.
1) தூய மக்ஸிமிலியன் கோல்பே 2) தூய அன்னைதிரேசா
3) தூய இரண்டாம் அருள், சின்னப்பர் 4) தூய வின்சென்டி போல்

20) பதுளை மறை மாவட்டத்திலே ஏழைகள், துன்பப்படுவோருக்காக குரல் கொடுத்ததினால் இலங்கை அரச படைகளால் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட அருட்தந்தை,
1) மேரி பஸ்தியன் அடிகள் 2) ஜீம்பிறவுள் அடிகள்
3) மைக்கல் றொட்றிகோ அடிகள் 4) பாக்கிய றஞ்சித் அடிகள்

21) வளர்ந்தோருக்கான உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை வழங்குபவர்.
1) மறை ஆயர் 2) குருமுதல்வர் 3) திருத்தொண்டர் 4) குருவானவர்

22) முதலாம் கட்டளைக்கு எதிரான செயல்,
1) அன்றாட நிகழ்வுகளில் இறைவனை குறை கூறுவது.
2) கிறிஸ்தவனாக கிறிஸ்துவுக்கு காட்சி பகர மறுப்பது.
3) ஞாயிறு தினத்தில் பிறருக்கு உதவக் கூடிய சந்தர்ப்பங்களை நழுவவிடுதல்.
4) பிறமத வழிபாடுகளில் ஈடுபடுதல்.

23) “நோயாளரின் தூய பூசுதல்” எனும் அப்போஸ்தலிக்கப் படிப்பினையை வெளியிட்ட திரு அவைத் தலைவர்,
1) தூய 23ம் யோவான் 2) தூய 6ம் சின்னப்பர்
3) தூய 2ம் அருள் சின்னப்பர் 4) 15ம் பெனடிக்ற்


kalvi.lk

24) கிறிஸ்துவை நெருக்கமாக பின்பற்றி தூய்மையுடன் தத்தம் வீடுகளிலிருந்து கொண்டே மணத்துறவுடன் வாழ்ந்தவர்கள்,
1) ஏகாந்திகள் 2) மடத்துறவிகள் 3) தபோதனர் 4) வனத்துப் பிதாக்கள்

25) திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் நோக்கங்களுள் பொருத்தமற்ற கூற்று யாது?
1) இறைவனுக்கு ஆராதனை செய்தல். 2) செபித்து தனது தேவைகளை நிறைவு செய்வதற்காக
3) இறைவனுக்கு நன்றி கூறுதல். 4) பாவங்களுக்கு பரிகாரம் செய்தல்.

26) திருச் சிலுவைக் கன்னியர் சபையின் பணியாக அமைவது.
1) இளையோருக்கான சுய தொழிற்பயிற்சி 2) அநாதைகள் இல்லங்களை நடாத்துதல்
3) மறை உரை ஆற்றுதல் 4) மருத்துவப் பணிபுரிதல்

27) “இறைவனின் திருப்பெயரை மரியாதையுடன் உச்சரித்தல்”தொடர்பில் திருச்சபையின் மறைக் கல்வி நூல் எண்
1) 2150 – 2158 2) 2050 – 2052 3) 1920 – 1922 4) 1819 – 1822

28) மரியாயின் சேனையை ஆரம்பித்து வைத்தவர் யார்?
1) திரு பிராங்டப் 2) கருதினால் லியோ ஜோசப்
3) அருனாளர் பெட்ரிக் ஓசன்னம் 4) தூய வின்சென்டி போல்

29) தந்தையின் மரணத்திற்குப் பின் தனது அன்னையோடு வீட்டுப் பொறுப்புக்களை ஏற்று சகோதர, சகோதரிகளோடு இறைவனுக்குகந்த வாழ்க்கையை நடாத்திச் சென்றவர்.
1) தூய கத்தரீனா 2) தூய அக்னெஸ் 3) தூய மரியகொறற்றி 4) தூய டொமினிக்

30) தனியாள் சொத்துக்களை எவ்வாறான முறையில் கையாள வேண்டும் என எடுத்துக்கூறும் கட்டளைகள்
1) மூன்றாவது, ஏழாவது கட்டளைகள் 2) இரண்டாவது, ஐந்தாவது கட்டளைகள்
3) ஏழாவது, பத்தாவது கட்டளைகள் 4) எட்டாவது, ஒன்பதாவது கட்டளைகள்

31) “பொய் முகம் அணிந்து நாடகம் நடித்தல்” என்ற கிரேக்க சொற்படி தொடக்க திரு அவையில் செயற்பட்டவர்கள்
1) பேதுரு, யாக்கோபு 2) அனனியா, சப்பிரா 3) ஸ்தேவான், பிலிப்பு 4) பவுல், யோவான்

32) படைப்பை “ஆளுதல்” என்பதற்கு பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் யாது?
1) பராமரிப்பு 2) அபாத் 3) ஷாமார் 4) றதா

33) தன் சகோதரர், சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் ..... ஆளாவர். இடைவெளிக்குப் பொருத்தமானது.
1) தண்டனைத் தீர்ப்புக்கு 2) எரி நரகத்துக்கு
3) தலைமைச்சங்கத் தீர்ப்புக்கு 4) கொலைப் பழிக்கு

34) ஆன்மீக இரக்கச் செயலாக அமைவது.
1) உணவு இல்லாதவர்களுடன் உணவை பகிர்ந்து கொள்வது
2) நோயுற்றவர்களுக்கு உதவுதல்.
3) கல்வி தேவைப்படுவோருக்குக் கல்வி கற்பிப்பது.
4) இறந்தவர்களை அடக்கம் செய்வது.

35) திருச்சபை சட்டங்களுள் மூன்றாவது கட்டளையை உறுதிப்படுத்துவது.
1) ஞாயிறு தினங்களிலும் கடன் திரு நாட்களிலும் திருப்பலியில் கலந்து கொள்வது.
2) பாஸ்கா காலத்தில் திவ்விய நற்கருணையை உட்கொள்வது.
3) திரு அவையின் செயற்பாடுகளுக்கு உதவுவது.
4) வருடத்தில் ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவது.

36) இயேசுவின் தூதரைப் பணியின் சுருக்கம் உள்ளடக்கப்பட்டுள்ள செபம்,
1) இயேசு கற்பித்த செபம் 2) மங்கள வார்த்தை செபம்
3) விசுவாச அறிக்கை 4) உன்னத குருத்துவ செபம்

37) இயேசு கற்பித்த செபம் காணப்படும் நற்செய்திகள்,
1) தூய லூக்கா, தூய மாற்கு 2) தூய மத்தேயு, தூய லூக்கா
3) தூய மாற்கு, தூய யோவான் 4) தூய யோவான், தூய லூக்கா

38) திருவழிபாட்டு ஆண்டு அதிகார பூர்வமாக ஆரம்பிக்கப்படுவது.
1) திருவருகைக்கு காலத்தின் முதல் ஞாயிறு தினத்துடன்
2) திருவருகைக் காலத்தின் இரண்டாவது ஞாயிறு தினத்துடன்
3) திருவருகைக் காலத்தின் நத்தார் தினத்தின் முன்னைய ஞாயிறு தினத்துடன்


kalvi.lk

4) திருவருகைக் காலத்தின் மூன்றாவது ஞாயிறு தினத்துடன்.

39) கி. பி 1858 இல் பிரான்சில் லூர்து நகரில் மரியன்னை காட்சி அளித்தது.
1) லூசியா என்ற சிறுமிக்கு
2) ஜசிந்தா என்ற சிறுமிக்கு
3) பிரான்சிஸ்கோ என்ற சிறுவனுக்கு
4) பெர்ணதேத் என்ற சிறுமிக்கு

40) திரு அவையில் ஆழ்தியானம் பற்றிய நூல்கள் மூலம் பங்களிப்புச் செய்த இருவர்.
1) புனித அவிலாதெரேசா, புனித இக்னேசியஸ் லொயலா
2) புனித அவிலாதெரேசா, புனித சிலுவை யோவான்
3) புனித சிலுவை யோவான், புனித கயித்தான்.
4) புனித வின்சென்டிபோல், புனித லொயலா இஞ்ஞாசியார். (1 x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

- **முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் உரித்தாகும்.**

01) i) இறைவாக்கினர் நூல்கள் இரண்டினைத் தருக.
ii) வெளிப்பாட்டு இலக்கியத்தில் அடையாளங்கள் பயன்படுத்தப்படுவதற்கான குறிக்கோள்கள் இரண்டு தருக.
iii) திருப்பலிபற்றி புதிய உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் பெயர்கள் இரண்டு தருக.
iv) இறையன்புக்கு எதிரான பாவங்கள் இரண்டினைத் தருக.
v) கிறிஸ்து பிறப்புக் காலத்தில் கொண்டாடப்படும் விழாக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
vi) மத்தேயு நற்செய்திக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் இரண்டு தருக.
vii) திருமுழுக்கு யோவானைப் போன்று உண்மை, நீதி, சமத்துவத்திற்கு குரல் கொடுத்தமையினால் இறப்பை சந்தித்த குருக்கள் இருவரை எழுதுக.
viii) எட்டுப் பேறுகளுள் "விண்ணரசு" உரிமையாக்கிக் கொள்ளும் பேறுகள் இரண்டும் எவை?
ix) மறை மாவட்டக் குருக்களின் வார்த்தைப்பாடுகள் இரண்டையும் எழுதுக.
x) ஒழுங்கமைக்கப்பட்ட தியானத்தின் படிமுறைகள் இரண்டும் எவை?

02) i) திருவிவிலியத்தில் நோவா பற்றிக் குறிப்பிடப்படும் பண்புகள் இரண்டு தருக.
ii) இறைவாக்கினர்கள் இறைவாக்குரைக்கும் போது பயன்படுத்திய சொற்பதங்கள் மூன்று எழுதுக.
iii) தீமையான விடயங்களில் ஈடுபடும் உமது நண்பனுக்கு அத் தீமைகளிலிருந்து விடுபடுவதற்கு நீர் கூறும் ஆலோசனைகள் ஐந்தினை எழுதுக.

03) i) பலி செலுத்தவதன் நோக்கம் யாது?
ii) யூதர்களின் பாஸ்கா உணவில் இடம்பெறும் உணவுகள் மூன்றினை எழுதுக.
iii) திருப்பலியில் எவ்வாறு பக்தியுடனும், ஊக்கத்துடனும் பங்குபற்றுவீர் என்பதை ஐந்து கருத்துக்களில் விளக்குக.

04) i) பரிசுத்தவாரத்தின் முதன்மையான திருவழிபாடுகள் இரண்டு குறிப்பிடுக.
ii) காணிக்கை ஒப்புக்கொடுப்பதன் நோக்கங்கள் மூன்று எழுதுக.
iii) தற்கால சமூகத்தில் போதையற்ற சமுதாயத்தை கட்டியெழுப்ப நீர் செய்யக்கூடிய செயல்கள் ஐந்தினை விளக்குக.

05) i) ஒப்புரவு அருளடையாளத்தின் மனம் வருந்துதலின் வகைகள் இரண்டு எவை?
ii) ஒரு கிறிஸ்தவரின் தபச்செயல்களாகக் கருதப்படுபவை மூன்றினை எழுதுக.
iii) நோயில் பூசுதல் அருளடையாளத்தின் மூலம் கிடைக்கும் இறையருள் ஐந்தினை கூறி விளக்குக.

06) i) மரியன்னை காட்சி கொடுத்த இடங்கள் இரண்டும் தருக.
ii) இயேசு இறுதி இரவுணவின்போது நிறைவேற்றிய செயல்கள் மூன்றினை எழுதுக.
iii) பிளவுபட்டுவரும் கிறிஸ்தவ சமூகங்களை ஒற்றுமைப்படுத்த இறைவனிடம் வரம்வேண்டி ஐந்து விடயங்களை உள்ளடக்கிய செபம் ஒன்றை எழுதுக.

07) பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
i) உயிர்களை மதித்து நடப்போம்.
ii) தூய மக்ஸிமிலியன் கோல்பே அடிகள்
iii) துறவற வாழ்வு
iv) சமூக அருளடையாளங்கள்


kalvi.lk

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page